**ஜூலை– 08**

# TNPSC துளிகள்

- முதன்மை கடல்சார் ஏற்றுமதி பொருட்களாக விளங்கும் உறைந்த இறால் மற்றும் மீன்களுடன் இந்தியாவின் கடல்சார் ஏற்றுமதி 2017-2018ஆம் ஆண்டில் முதன் முறையாக 7 பில்லியனைக் கடந்துள்ளது. அமெரிக்க மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகியவை முறையே 32.76% மற்றும் 31.59% சதவிகிதங்களுடன் இந்தியாவின் கடல்சார் பொருட்களின் இறக்குமதியைத் தக்க வைத்துள்ளன.
- இந்தியத் தேர்தல் ஆணையம் பிரெய்லி வரைபட வசதியுடன் கூட வாக்காளர் அடையாள அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது. தேர்தல நடைமுறையின் போது பார்வைக் குறைபாடு உள்ளவர்களை அதிகம் பங்கு பெற வைப்பதற்காக இதை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது அணுகத்தக்க தேர்தல்கள் மீதான உத்தி முறையிலான திட்டத்தை வெளியிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## சர்வதேச உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு - 2018 (International Union of Food Science & Technology - IUFoST)

- சர்சதேச உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டுறவானது தனது மதிப்புமிக்க உலகளாவிய மாநாட்டின் 19வது பதிப்பு, நாவி மும்பையில் அக்டோபர் மாதம் 2018-ம் ஆண்டு நடைபெறும் என்று அறிவித்துள்ளது.
- IUFoST என்ற உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான உலக அமைப்பு, இந்திய தேசிய அறிவியல் சங்கத்துடன் (Indian National Science Academy) சேர்ந்து ஒத்த நிறுவனமாக இந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்கிறது.
- மதிப்புமிக்க இம்மாநாட்டின் இந்த பதிப்பின் முக்கிய நோக்கமானது 2025-க்குள் ஒரு தினத்திற்கு ஆரோக்கியமான, ஊட்டச்சத்தான, பாதுகாப்பான மற்றும் வெவ்வேறு உணவுகளுடன் 25 பில்லியன் உணவு வகைகளை அடைதல் ஆகும்.



# சர்வதேசச் செய்திகள்

## கொலம்பியாவின் சிரிபிகியூட் பூங்கா- உலக பாரம்பரிய இடம்

- ஐக்கிய நாடுகள், கொலம்பியாவின் சிரிபிகியூட் தேசிய பூங்காவினை தனது உலக பாரம்பரிய இடங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது.
- காகுய்ட்டா மற்றும் குவாவியர் ஆகிய தெற்கு மாகாணங்களில் அகண்டு காணப்படும் இந்த பூங்காவானது, நாட்டின் பெரியதும் வடக்கு அமேசானில் மிகப்பெரிய அளவிலான தாவரப் பன்முகத் தன்மையைக் கொண்டதுமான பூங்காக்களுள் ஒன்றாகும்.
- காடுகளிலிருந்து வெளியே உயரும் டெபூய்ஸ் என்ற மேசை மேற்பரப்பு போன்ற பாறை அமைப்பிற்கும் இந்த பூங்கா பிரபலமானதாகும்.
- கொலம்பியாவில் உலகப் பாரம்பரிய தளம் என்ற தகுதி கொடுக்கப்பட்ட 9வது இடம் இதுவாகும்.
- சிரிபிகியூட் 1989-ல் முதன்முதலில் தேசிய பூங்காவாக அறிவிக்கப்பட்டது. இது உலகின் பழமையான பாறை அமைப்புகளின் ஒன்றின் மேல் அமைந்துள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## ‘கான் பிரகாரி ‘செயலி

- மத்திய நிலக்கரி, இரயில்வே, நிதி & பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் பியூஸ் கோயல் நிலக்கரி சுரங்க கண்காணிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பு (CMSMS - Coal Mine Surveillance & Management System) மற்றும் கைபேசி செயலி ‘கான் பிரகாரி’ ஆகியவற்றை தொடங்கி வைத்தார்.
- இந்த செயலி நிலக்கரி இந்தியா லிட் (Coal India Ltd) மற்றும் பாஸ்கராச்சார்யா விண்வெளி பிரயோகம் மற்றும் புவியியல் - தகவலியல் நிறுவனம் (Bhaskaracharya Institue of Space Application and Geo-informatics - BISAG) ஆகியவற்றின் துணை நிறுவனமான மத்திய சுரங்க திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு நிறுவத்தினால் (CMPDI-Central Mine

Planning & Design Institute) உருவாக்கப்பட்டதாகும்.

- CMSMS என்பது அங்கீகரிக்கப்படாத இடங்களில் நடைபெறும் சுரங்க வேலைகளை கண்டுபிடித்துக் காட்டும் வலைதள அடிப்படையிலான புவியியல் தகவலியல் அமைப்பு செயலி ஆகும்.
- இந்த அமைப்பில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் அடிப்படை தளமானது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் வரைபடம் (நில வரைபடம்) ஆகும். இந்த வரைபடம் கிராமப்புற நிலையிலான தகவல்களை தரும்.
- கான் பிரகாரி, பக்கத் துளை சுரங்க வேலை, திருட்டு போன்ற சட்ட விரோத நிலக்கரி சுரங்க வேலைகளைப் பற்றிய நடவடிக்கைகளை தெரியப்படுத்தும் ஒரு கருவியாகும்.




# மாநிலச் செய்திகள்

## அன்னப்பூர்ணா பால் விநியோகத் திட்டம்

- பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜே உயர்லட்சியமுடைய அன்னபூர்ணா பால் விநியோகத் திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்.
- கிட்டத்தட்ட அரசுப் பள்ளிகள் மற்றும் ஓதப்பள்ளியில் (மதராசா) பயிலும் 62 லட்ச மாணவர்கள் அன்னபூர்ணா பால் விநியோக திட்டத்தின் கீழ் வாரத்திற்கு மூன்று முறை புதிய மற்றும் தூய்மையான பாலைப் பெற்று பயனடைவார்கள்.
- 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 150 மி.லி. அளவு பாலும் 6 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 200 மி.லி. அளவு பாலும் வழங்கப்படும்.

# விளையாட்டுச் செய்திகள்

## காமன்வெல்த் சதுரங்க சாம்பியன்ஷிப் - 2018

- ஜூன் 25, 2018 லிருந்து ஜூலை 4, 2018 வரை நடைபெற்ற காமன்வெல்த் சதுரங்க சாம்பியன்ஷிப் - 2018 டெல்லி சதுரங்க சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இது இந்தியாவின் தலைநகர் புதுதில்லியில் நடைபெற்றது.
- அவை 8 வயதிற்குக் கீழிலிருந்து 20 வயதிற்குக் கீழ் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஓபன் பிரிவில் நடத்தப்பட்டது.
- இந்தியாவின் இன்டர்நேஷனல் மாஸ்டர் P.கார்த்திகேயன் காமன்வெல்த் சதுரங்க சாம்பியன்ஷிப் - 2018ன் வியப்பூட்டும் வெற்றியாளர் ஆவார். இந்திய பெண்கள் கிராண்ட் மாஸ்டர் மற்றும் இன்டர்நேஷனல் மாஸ்டர் தானியா சச்தேவ் பெண்களுக்கான காமன்வெல்த் போட்டியினை வென்றார்.
- மங்களூருவைச் சேர்ந்த சிர்யானா மல்யா என்ற எட்டு வயது சதுரங்க மேதை 8 வயதிற்குட்பட்ட காமன்வெல்த் சதுரங்க சாம்பியன்ஷிப் - 2018 ஐ வென்றார்.




# இதரச் செய்திகள்

## MAIDS- இந்தியாவின் 'சிறந்த பல்மருத்துவக் கல்லூரி'

- டெல்லியின் தேசிய தலைநகரப் பிரதேச அரசின் கீழ் இயங்கும் மவுலானா ஆசாத் பல் மருத்துவ அறிவியல் நிறுவனம் (MAIDS - Maulana Azad Institute of Dental Sciences) 7வது வருடமாக சிறந்த பல்மருத்துவக் கல்லூரியாக தகுதி பெற்றுள்ளது.
- இந்தியாவிலேயே தேசிய மருத்துவமனை மற்றும் சுகாதார சேவை வழங்குநர்களுக்கான அங்கீகரிப்பு கழகத்தினால் (National Accreditation of Board for

Hospitals and Healthcare Providers - NABH) அங்கீகரிக்கப்பட்ட முதல் மற்றும் ஒரே பல் மருத்துவமனை MAIDS ஆகும்.

- - - - - - - - - - - - - - -